II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**MCOP. No. 416 of 2019**

Deposition of witness for the Petitioner / PW 1
solemnly by Thiru.K.Palanikumar, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 09.10.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : Nirmala | Caste | : |
| Father's / Husband's Name | : | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk | : |

முதல் விசாரணை =

நான் வழக்கின் 2ம் மனுதாரர். இன்று ம.சா.1. ஆக எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கின்றேன். அதில் உள்ள விவரங்கள் உண்மையானவை என நேரில் அறிந்து கையெழுத்திட்டுள்ளேன். அதில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை 1 முதல் 24 வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. முதல் தக்வல் அறிக்கையின் நகல் ம.சா.ஆ.1

2. இறப்பு அறிக்கையின் நகல் ம.சா.ஆ.2

3. எதிர்மனுதாரின் காப்பீட்டு நகல் ம.சா.ஆ.3

4. பிரேத கூறாய்வு அறிக்கையின் நகல் ம.சா.ஆ.4

5. இறப்பு சான்றிதழின் நகல் ம.சா.ஆ.5

6. வாரிசு சான்றிதழின் நகல் ம.சா.ஆ.6

7. எனது அண்ணனின் ஆதார் நகல் ம.சா.ஆ.7

8. எனது ஆதார் நகல் ம.சா.ஆ.8

9. 2ம் மனுதாரின் ஆதார் நகல் ம.சா.ஆ.9

10. 3ம் மனுதாரின் ஆதார் நகல் ம.சா.ஆ.10

11. 4ம் மனுதாரின் ஆதார் நகல் ம.சா.ஆ.11

12. எனது வங்கி கணக்கு புத்தகத்தின் நகல் ம.சா.ஆ.12.

13. 2ம் மனுதாரின் வங்கி கணக்கு புத்தகத்தின் நகல் ம.சா.ஆ.13

14. 3 ம் மனுதாரின் வங்கி கணக்கு புத்தகத்தின் நகல் ம.சா.ஆ.14.

15. 4ம் மனுதாரின் வங்கி கணக்கு புத்தகத்தின் நகல் ம.சா.ஆ.15

16. எனது சகோதர் ஓட்டிய இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் நகல் ம.சா.ஆ.16

17. எதிர்மனுதார் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் நகல் ம.சா.ஆ.17.

18. எனது அண்ணனின் ஓட்டுநர் உரிம் ம.சா.ஆ.18

19. மாதிரி வரைபடம் ம.சா.ஆ.19

20. பார்வை மகசர் ம.சா.ஆ.20

21. எனது பேன் அட்டை நகல் ம.சா.ஆ.21

22. 2ம் மனுதாரின் பான் அட்டை நகல் ம.சா.ஆ.22

23. 3ம் மனுதாரின் பான் அட்டை நகல் ம.சா.ஆ.23

24.  4ம் மனுதாரின் பான் அட்டை நகல் ம.சா.ஆ.24

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை=

விபத்தில் இறந்தவர் எனது அண்ணன். விபத்து சமயம் என் அண்ணன் மோட்டார் சைக்கிளை ஓட்டி சென்றார். 1ம் எதிர்மனுதாரின் லாரிக்கும் என் அண்ணனின் மோட்டார் சைக்கிளுக்கும் இடையே விபத்து ஏற்ப்பட்டது என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் விபத்தை பார்த்தவர்கள் லாரி மோதியதாக சொன்னார்கள். ம.சா.ஆ.1ன் படி 1ம் எதிர்மனுதாரின் லாரி கவனக்குறைவாக ஓட்டப்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பிரிவின்

கீழ் இந்த மனுவை நாங்கள் தாக்கல் செய்ய முடியாது என்றால் எனக்கு தெரியாது. எனது அண்ணன் அயப்பாக்கத்தில் வசிப்பதாக அவருடைய வாரிசு சான்றிதழ் ம.சா.ஆ.6 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது அக்காள் ரேவதி முதல் மனுதாரர் ஆவார். அவருடைய ஆதார் அட்டை மா.சா.ஆ.8. அவர் அஸ்தினாபுரத்தில் குடியிருக்கிறார். நான் அம்பத்தூரில் கணவர் வீட்டில் வசிக்கிறேன். என் தங்கை மாலதி அய்யம்பேட்டை காஞ்சிபுரத்தில் வசிக்கிறார். அவருடைய ஆதார் அட்டை மா.சா.ஆ.10. 4ம் மனுதாரர் பானுமதி அன்னனூரில் வசிக்கிறார். அவருடைய ஆதார் அட்டை மா.சா.ஆ.11. நாங்கள் யாரும் என் அண்ணனுடன் கூட்டுக்குடும்பமாக இல்லை என்றால் சரிதான். அவருடைய வருமானத்தை பொருத்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இழப்பீடு பெறுவதற்காக அவருடைய வருமானத்தை அதிகப்படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் 4பேரும் இறந்தவரின் வருமானத்தை சார்ந்து இல்லை என்பதால் எங்களுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையின் படி இந்த மனுவை விசாரிக்க இந்த நீதிமன்றத்திற்கு ஆள்வரை இல்லை என்றால் எனக்கு தெரியாது. இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.